# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.116 /2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராஜ் | Father's/Husband's Name : | பெரியசாமி |
| Village | : உப்புத்துரை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.07.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் உப்புத்துரையில் தான் குடியிருக்கிறேன். 22.07.2005 ம் தேதி உப்புத்துரையை சேர்ந்த ராமனுக்கு 7 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி ராமன் 2011 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் கிரையம் கொடுத்த பிறகு 2011 ராமன் இறக்கும் வரை அவர் கிரையம் வாங்கிய இடத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல, நான் தான் அனுபவத்தில் இருந்தேன். ராமனுக்கு எழுதி கொடுத்த கிரையப் பத்திரத்தின் ஆவண எண்.741/2005 என்றால் சரிதான். கிரையம் கொடுத்த சொத்தை நான் சட்ட விரோதமாக அனுபவம் செய்து வந்தேனா என்றால் சரியல்ல. நான் மறு கிரையம் வாங்கிவிட்டேன். நான் ராமனுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை ரத்து செய்துவிட்டு மறு கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை, ரத்து செய்து கொடுப்பதாக சொல்லியிருந்தார் அதற்குள் இறந்துவிட்டார்.

2) ராமன் பெயரில் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை ரத்து செய்யாமல் ராமன் எனக்கு மறு கிரையம் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராமன் இறந்த பிறகு அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் தான் தாவா சொத்தில் இன்று வரை அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கடந்த 10.11.2023 ம் தேதி தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து அதில் உள்ள மரங்களை நான் வெட்டியதற்காக என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் புகார் கொடுத்தது உண்மை தான். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தை அணுக சொல்லிவிட்டார்கள். அந்த புகாரின் மீது தேனி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு குற்ற பிரிவு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு கிரையம்

கொடுத்துவிட்டு 2022ம் ஆண்டு கிரையம் வாங்கியவரின் வாரிசுகளிடம் பிரச்சனை செய்வது தவறு என்று அறிவுறுத்தி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல.

3) பிரதிவாதிகள் ஆவணத்தை அழித்துவிட்டதால் நீதிமன்றத்தை அணுக சொல்லிவிட்டார்கள். பிரதிவாதிகள் ஆவணத்தை அழித்துவிட்டார்கள் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 06.01.2023ம் தேதி பிரதிவாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக பாக விஸ்தி பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றால் மோசடியாக எழுதியுள்ளார்கள். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 30 செண்ட் என்றால் சரிதான். அதில் 7 செண்ட் நிலத்தை தான் ராமனுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அதை மறு கிரையம் வாங்கிவிட்டேன். மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு என் பெயரிலும், 2ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டுப்பட்டா ஏற்பட்டது என்றால் அது மோசடியான ஆவணம். 22.07.2005ம் தேதி ராமனுக்கு கிரையம் கொடுத்த சொத்தை பொறுத்து எந்த பதிவு ஆவணமும் இல்லாமல் மறு கிரையம் வாங்கிவிட்டதாக நான் சொல்வது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

4) தாவா மொத்த சொத்தையும் கடந்த 10.02.2005ம் தேதி ராஜா வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி ராஜா வகையறா கடனுக்காக தான் தாவா சொத்தை கிரையம் கொடுத்தோம் என்று கூறி தாவா சொத்தை மறு கிரையம் கேட்டால் கொடுத்துவிடுவேனா என்றால் கொடுக்கமாட்டேன். அதேபோல் ராமன் கிரையம் வாங்கிய ஆவணத்தை ரத்த செய்யக் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ராமன் கிரையம் வாங்கிய சொத்து எனக்குபாத்தியப்பட்ட சொத்திற்கு அருகில் இருப்பதால் பிரதிவாதிகளுக்கு தெரியாமல் அதிலுள்ள உள்ள பலன்களை நான் அவ்வப்போது திருடி வருகிறேன் என்றா்ல் சரியல்ல. வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.07.06 17:35:17 +0530

District Munsif,

Andipatti.